## இந்தியாவில் இரண்டாவது இடம்!

# பெண் தொழில் முனைவோரை உருவாக்குவதில் தமிழ்நாடு சாதனை!

### அமைச்சர் கயல்விழி செல்வராஜ் அறிக்கை!

**சென்னை, டிச.5-**

**‘திராவிட மாடல்’ அரசு பொறுப்பேற்ற மூன்றாண்டுகளில் 6,22,373 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு பெண் தொழில் முனைவோரை உருவாக்குவதில் தமிழ்நாடு இந்தியாவில் இரண்டாவது இடம் பெற்றுள்ளது என்று மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் தெரிவித்துள்ளார்.**

**இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-**



பெண்களைச் சமூக பொருளாதாரச் சுதந்திர முடையவர்களாக உயர்த்துவது சமூகநீதி அரசியலின் மிக அடிப்படையான நோக்கமாகும். அதனடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு பெண்களை தொழில் முனைவோர்களாக மாற்றுவதற்கான பல்வேறு திட்டங்களைத் நமது ‘திராவிட மாடல்’ அரசு செயல்படுத்தி வருகிறது.

சிறு குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களைப் (MSME) பதிவு செய்வதற்கான “உத்யம்” தளத்தில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை, 2021-22ஆம் ஆண்டில் 1,27,316 பேரும் 2022-23 ஆம் ஆண்டில் 2,01,715 பேரும் 2023-24ஆம் ஆண்டில் 2,93,342 பேரும் பதிவு செய்துள்ளனர். இதன் மூலம் மொத்தமாக கடந்த மூன்றாண்டுகளில் 6,22,373 பெண் தொழில் முனைவோர்களின் நிறுவனங்களைப் பதிவுசெய்து இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தைப் பெற்று தமிழ்நாடு சாதனைப் படைத்துள்ளது.

**மகளிர் விடியல் பயணம்!**

‘மகளிர் விடியல் பயணம்’ ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’, ‘புதுமைப் பெண்’ போன்ற மகளிருக்கான திட்டங்களின் வழியில் பெண் தொழில் முனைவோருக்கான சிறப்பு நடவடிக்கைகளையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

‘வாழ்ந்து காட்டுவோம்’ திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சிகள்; புத்தொழிலை (Startup) ஊக்குவிப்பதற்கான மானியத்துடன் கூடிய ‘TANSEED’ திட்டத்தின் கீழ் பெண் தொழில் முனைவோருக்குச் சிறப்புத் தொகுப்புகள் போன்ற பெண் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்கான தமிழ்நாடு அரசின் தொலைநோக்கு நடவடிக்கைகளால் இச்சாதனை சாத்தியப்பட்டிருக்கிறது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் மகளிர் வெற்றிப் பயணம்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழிவகுத்த பாதையில், மகளிர் முன்னேற்றமே சமுதாயத்தை முன்னேற்ற அடிப்படை என்பதை உணர்ந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்கள், ஒவ்வொரு கட்டத்திலும் பெண்களுக்கு சொத்துரிமை, கல்வி உரிமை, தொழில் செய்யும் உரிமை போன்றவற்றை வழங்கி, தொழில் சார்ந்த விவரங்களை கற்பிப்பதுடன் அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தி, அவர்களைச் சுதந்திரமானவர்களாகவும், பொருளாதார தற்சார்புடையவர்களாகவும் மாற்றி பாலினச் சமத்துவத்தை உறுதிப்படுத்தி, மகளிரின் வெற்றிப்பயணத்தை ‘திராவிட மாடல்’ அரசின் வழியாக தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் கயல்விழி செல்வராஜ் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## சிறுபான்மையின மக்களை மேம்படுத்த கொண்டுவரப்பட்ட

# சமூக பொருளாதார திட்டத்தில் தொய்வு ஏன்?

### மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி!

புதுடெல்லி, டிச.5-

“சிறுபான்மையின மக்களின் சமூகபொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட PMJVK (பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம்) திட்டம் ஏன் தொய்வுற்ற நிலையில் செயல்படுகிறது” நாடாளுமன்ற மாநிலங்களவை யில் கழக எம்.எம்.அப்துல்லா கேள்வி எழுப்பினார்.



“பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம் (PMJVK) திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளில் சிறுபான்மையினர் செறிந்து வாழும் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் என்ன?, அதன் மூலம் எத்தனை பயனாளிகள் பயன் பெற்றனர்? என்றும், தமிழ்நாட்டில் இத்திட்டத்தை செயல்படுத்துவதில் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் என்ன?” என்றும் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா மாநிலங்களவையில் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த இந்திய ஒன்றிய சிறு பான்மையினர் நலத்துறை அமைச்சர் கிரன் ரிஜ்ஜு “இது சிறுபான்மையினர் செறிந்து வாழும் பகுதிகளில் சமூக பொருளாதார உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான திட்டமாகும். தமிழ்நாட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளில் PMJVK திட்டத்தின் மூலம் வகுப்பறைகள், நூலகங்கள், சமூக நலக் கூடங்கள், அங்கன்வாடி மையங்கள், திறன் மேம்பாட்டு பயிற்சி மையங்கள், மருத்துவ உதவித் திட்டங்கள் என மொத்தம் 123 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதற்காக செலவழிக்கப்பட்ட 658 கோடியே 44 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயில் ஒன்றிய அரசின் பங்கு 395 கோடியே 6 இலட்சத்து 52 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் இத்திட்டத்தை செயல்படுத்துவதில் ஏற்படுகிற தாமதமே முக்கிய சவாலாக உள்ளது.” என்று தெரிவித்துள்ளார்.

---

## விழுப்புரம் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட இடங்களில் 900 களப்பணியாளர்கள்

# மின் இணைப்பு சீரமைப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்!

### சீரமைப்புப் பணியைப் பார்வையிட்டு அமைச்சர் செந்தில் பாலாஜி தகவல்!

செஞ்சி, டிச 5-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பெஞ்சல் புயலால் மின்கம்பங்கள் சேதாரம் அடைந்தன. மேலும் இதனால் செஞ்சி நகரம் உள்ளிட்ட ஊரக பகுதிகளில் மின்தடை ஏற்பட்டுள்ளது.

இதை அடுத்துசெஞ்சி பேரூராட்சி சிறு கடம்பூர் சாவடி தெரு,புனிதமிக்கில் மேல்நிலைப்பள்ளி வளாகம் அருகில் மின்தடை ஏற்பட்டுள்ள பகுதிகளையும் மின்கம்பங்கள் சீரமைக்கும் இடங்களை மின்சாரத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி நேரில் சென்று பார்வையிட்டார் மேலும் களப்பணியில் ஈடுபட்டுள்ள மின்சாரத் துறை ஊழியர்களை சந்தித்தஅமைச்சர் செந்தில் பாலாஜிமின் தடைப்பட்ட பகுதிகளில் பணியாளர்கள் துரிதமாக செயல்பட்டு மின் இணைப்பை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் அறிவுறுத்தினார்.

இதைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் செந்தில் பாலாஜி:

பெஞ்சல் புயல் மழையால் விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு பாதிப்புகள் உருவாகியுள்ளன குறிப்பாக மின்கம்பங்கள் காற்று மழையால் சாய்ந்துள்ளன. இதனால் வீடுகளுக்கு வழங்கப்படும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின் படி புயல் மழையால் பாதிக்கப்பட்டுள்ள விழுப்புரம் மாவட்டத்திற்கு நேரில் சென்றுமின்தடை ஏற்பட்டுள்ள பகுதிகளில் விரைந்து பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்.

அந்த வகையில் விழுப்புரம் மாவட்டத்தில் 7 லட்சத்து 56 ஆயிரம் மின் இணைப்புகள் உள்ளன இதில் 24000 மின் இணைப்புகள் மட்டும் மின் இணைப்பு வழங்காமல் உள்ளது.

மேலும் பல்வேறு மாவட்டங்களில் இருந்து 900 மின் கள பணியாளர்கள் மின் துறையால் பாதிக்கப்படு இடங்களில் தீவிர களப் பணி ஆற்றி வருகின்றனர்.

முதலமைச்சரின் துரித நடவடிக்கையால் கடந்த இரண்டு நாட்களில் இப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேல்மலையனூர் தாலுகா கூடுவாபுண்டியில் புதிய மின் நிலையம் அமைக்க வேண்டுமென விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.

முதல் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று கூடுவாமுடியில் துணை மின் நிலையம் அமைப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.

ஆய்வின் போது செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான், தமிழ்நாடு மின்சார வாரிய தலைவர் நந்தகுமார், தமிழ்நாடு மின்சாரத் துறை இயக்குனர் மஸ்கர்னஸ், ஒன்றிய பெருந்தலைவர்கள் செஞ்சி விஜயகுமார், வல்லம் சமுதாய குமார், செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் உடன் இருந்தனர்.



ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்றத் தொகுதி பி.மேட்டுப்பாளையம் பேரூராட்சி பூமாண்ட கவுண்டனூர் முதல் நல்லிகவுண்டனூர் வரை தார் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்ற பொதுமக்களின் 30 ஆண்டுகால கோரிக்கை அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் தொடர் முயற்சியால் நல்லிக்கவுண்டனூர் முதல் பூமாண்ட கவுண்டனூர் வரை இணைப்பு தார்சாலை அமைத்திட நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பட்டத்தரசி அம்மன் கோவில் திருப்பணி செய்ய இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நிதி பெற்றுத் தந்ததற்காகவும் ஊர் பொதுமக்கள் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலத்தை அவரது இல்லத்தில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

---

## தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் சார்பில் நடைபெற்ற

# ‘விளைவு அடிப்படையிலான’ கல்விப்பட்டறை!

### அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, டிச. 5 -

உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன் சென்னை பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் சார்பில் நடைபெற்ற விளைவு அடிப்படையிலான கல்விப்பட்டறையை (Outcome Based Education Workshop Series) தொடங்கி வைத்தார்

உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன் சென்னை பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றம் சார்பில் நடைபெற்ற Outcome Based Education Workshop Series கல்விப்பட்டறையை நேற்று முன்தினம் (03.12.2024) தொடங்கி வைத்தார்.




சென்னை பல்கலைக் கழகத்தில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் (Tamil Nadu State Council for Higher Education) சார்பில் நடைபெற்ற ”Outcomes Based Education Workshop Series கல்விப் பட்டறையை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் உயர் கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற துணைத் தலைவர் டாக்டர் எம்.பி.விஜயகுமார், (ஓய்வு), தொழில்நுட்பக் கல்வி இயக்கக ஆணையர் த.ஆபிரகாம், பி.எம்.எஸ். கல்லூரி பேராசிரியர் முனைவர் கண்மணி புத்தி, பல்கலைக்கழக பதிவாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் உயர் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு உயர்கல்வித்துறையில் பல்வேறு புதுமைகளை செய்து வருகின்றது. மாணவர்களின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு நான் முதல்வன் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. எதிர்கால இந்தியாவை கட்டமைக்கும் வல்லமை படைத்த இளைஞர்களை உருவாக்குவது உயர்கல்வித் துறை.

இந்திய அளவில் உயர் கல்வி பெற்றவர்கள் 28 சதவீதம். 2030க்குள் 50 சதவீதத்தை எட்ட வேண்டும் என்பது இந்திய அரசின் எதிர்பார்ப்பு. ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் திகழும் நமது தமிழ்நாட்டில் உயர்கல்வி பெற்றவர்கள் 47 சதவீதம் பேர்.

கல்வி கற்பதிலும், மாணவர்கள் கற்றுக்கொள்வதிலும் செயல்படுத்திவரும் திட்டத்தை மேம்படுத்துவதுதான் இந்த பயிலரங்கத்தின் நோக்கம். ஒவ்வொரு மாணவரும் அடையவேண்டிய திறன் என்ன என்பதை அறிஞர்கள் கணித்து, என்னென்ன உத்திகளை ஆசிரியர்கள் கையாண்டால் அந்த திறமைகளை மாணவர்களிடத்தில் உருவாக்க வேண்டும் என்பது குறித்தும், அதற்கான கற்றல் கற்பித்தல் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை வரையறுப்பதும், மாணவர்களுக்கு முறையான திறன் மேம்பாடு சென்றடைகின்றதா என்பதை வகுப்பதுதான் இந்த பயிலரங்கின் நோக்கம்.

மாணவர்கள் பல்வேறு உயரங்களை அடைவதற்கான திட்டங்களை இந்த பயிலரங்கம் மூலம் வகுத்து, அவற்றை பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளுக்கும் கொண்டு சேர்த்து செயல்படுத்த வேண்டும்.

உயர்கல்வியில் திறமை வாய்ந்த ஆசிரியர் பெருமக்களும், மாணவர்களும் உள்ளனர். நல்ல திட்டங்களை வழங்க அரசும் தயாராக உள்ளது, அரசும், பேராசிரியர்களும் இணைந்து மாணவர்களுக்கு திறன்மேம் பாட்டிற்கான திட்டங்களை வகுக்க வேண்டும். முதலாவதாக மாணவர்களுக்கு தேவைப்படும் திறனறிவு கல்வி முறைகளை வகுக்க வேண்டும். இரண்டாவதாக அந்த திறனறிவுகள் மாணவர்களை சென்றடைய எந்த வகையான கற்பித்தல் முறை இருக்க வேண்டும் என்பதை வகுக்க வேண்டும். மூன்றாவதாக கற்றல் கற்பித்தல் நிகழ்ந்த பின்பு மாணவர்ளுக்கு கற்பித்தவைகள் சென்று சேர்ந்துள்ளதான என்பதை உறுதி செய்ய தேர்வுநடத்தப்பட வேண்டும். நான்காவதாக கல்வி முறையில் மேலும் எவ்வாறு முன்னேற்றம் செய்யலாம் என்பது குறித்தும் கருத்துகளை பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்த நான்கு படிகளையும் எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை வரையறுக்க இந்த பயிலரங்கம் உதவி செய்ய வேண்டும்.

இந்த கல்வி முறையால் மாணவர்கள் திறமையுடன், தன்னம்பிக்கையுடன் தொழில் முனைவோர்களாக உருவாக வாய்ப்புகள் அமையும். இதனால் சமூகத்தில் பெரிய அளவிலான முன்னேற்றம் ஏற்படும். இதுபோன்ற பயிலரங்கங்கள் பல்கலைக்கழகங்களிலும், மண்டல அளவில், கல்லூரி அளவில் என கடைகோடி மாணவருக்கும் சென்று சேரும் வகையில் விரிவுபடுத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்தார்.

இந்நகிழ்ச்சியில், உயர் கல்வித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.கே.கோபால், தமிழ்நாடு மாநில உயர்கல்விமன்ற துணைத்தலைவர் டாக்டர். எம்.பி.விஜயகுமார், (ஓய்வு), தொழில்நுட்பக்கல்வி இயக்க ஆணையர் த.ஆபிரகாம், பி.எம்.எஸ். கல்லூரி பேராசிரியர் முனைவர் கண்மணி புத்தி மற்றும் பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

## திருவண்ணாமலை மாவட்டம் – அகரம்பள்ளிப்பட்டு –

# தொண்டமானூரை இணைக்கும் உயர்மட்டப் பாலம் சேதம்!

### பாலத்தை சரிசெய்ய அரசு உரிய நடவடிக்கை!

திருவண்ணாமலை, டிச.05-

அகரம்பள்ளிப்பட்டு, தொண்டமானூர் கிராமங்களை இணைக்கும் வகையில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே ரூ.15.90 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட உயர்மட்ட பாலம் தற்போது 30.11.2024 மற்றும் 1.12.2024 ஆகிய நாட்களில் ஃபெஞ்சல் புயலால் பெய்த வரலாறு காணாத மழையின் காரணத்தினால் ஏற்பட்ட பெரும் வெள்ளப் பெருக்கினால் சேதமடைந்த பாலத்தின் விவர அறிக்கை வருமாறு:-

நீளம் 250 மீ (20.8 மீ நீளத்தில் 12 கண்கள்), அகலம் - 12 மீ, ஆண்டு சராசரி மழை அளவு, சாத்தனூர் அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு, வேகம் ஆகியவற்றை கணக்கில் கொண்டு, ஆற்றுபடுக்கையில் இருந்து வடிவமைக்கப்பட்ட நீர்வழியின் உயரம் 5 மீ. மற்றும் பாலத்தின் உயரம் 7 மீ.

நீரியியல் கணக்கீட்டின் படி பாலத்தின் நீர்வெளியேற்றம் (Design Discharge) 54,417 கன அடி. திறந்த வெளி அடித்தளம் மற்றும் 11 வட்ட வடிவ தூண்கள் அமைத்து பாலம் நல்ல தரத்துடன் கட்டிமுடிக்கப்பட்டது.

தற்போது, ஃபெஞ்சல் புயல் காரணமாக வரலாறு காணாத வகையில் 450 மி.மீ மேல் பெய்த கன மழையினால், சாத்தனூர் அணையிலிருந்து வழக்கமாக வெளியேற்றப்படும் உபரி நீரின் அளவை விட நான்கு மடங்கு அதிகமாக அதாவது 2,00,000 கனஅடிக்கு மேல் அணையின் பாதுகாப்பு கருதி தண்ணீர் திறந்து விடப்பட்டது.

மேலும் இப்பாலமானது, அணையிலிருந்து 24 கி.மீ, தொலைவில் உள்ளதால், தொடர் மழையினால் பாம்பாறு மற்றும் நீர்பிடிப்பு பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளநீரும், இணைந்து இப்பாலத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு பாலத்தின் மேற்பரப்பிற்கு மேல் சுமார் 4 மீட்டர் உயரத்திற்கு நீரின் வேகம் அதிகரித்து ஓடியதால் இப்பாலம் பெரும் சேதமடைந்து போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

சேதமடைந்த பகுதியை ஆய்வு செய்து மீண்டும் பாலம் சரி செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---



முன்னாள் அமைச்சர் கோ.சி.மணியின் 8ம் ஆண்டு நினைவு நளை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலத்தில் ஒன்றிய தி.மு.க. அலுவலகத்தில் உள்ள கோ.சி.மணியின் சிலைக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் ஆகியோர் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. உடன் மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், கு.வைத்தியநாதன், ஏ.ஆர்.ராஜா, ஞான. இமையநாதன், மலர்விழி திருமாவளவன், பஞ்சு.குமார், பி.முருகமணி, அமிர்தவிஜயகுமார், மயிலாடுதுணை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், குத்தாலம் பேரூர் கழகச் செயலாளர் எம்.சம்சுதீன், பொதுக் குழு உறுப்பினர்கள் காந்தி, வின்சென்ட்,மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே.மருது, க.அறிவழகன், சௌமியன் மற்றும் பலர் உள்ளனர்.

## சமூக நீதி இந்தியாவை – சமதர்ம இந்தியாவை – சகோதரத்துவ இந்தியாவை உருவாக்க –

# நாம் அனைவரும் இணைந்து போராடுவோம்!

## அகில இந்திய சமூகநீதிக் கூட்டமைப்பின் மூன்றாவது தேசிய இணைய மாநாட்டில் – காணொலி வாயிலாக – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

சென்னை,டிச.5-

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.12.2024) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக புதுடெல்லியில் நடைபெற்ற அகில இந்திய சமூக நீதி கூட்டமைப்பின் மூன்றாவது தேசிய இணைய மாநாட்டில் உரையாற்றுகையில், "சமூகநீதி இந்தியாவை உருவாக்க – சமதர்ம இந்தியாவை உருவாக்க – சகோதரத்துவ இந்தியாவை உருவாக்க நாம் அனைவரும் இணைந்து போராட வேண்டும்!" என்று குறிப்பிட்டார்.**

இந்தச் சமூகநீதி மாநாட்டைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் கழக மாநிலங்களவை உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான

வில்சன் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்! வாழ்த்துகள்! நன்றிகள்!

இரத்த பேதம் இல்லை. பால் பேதம் இல்லை. இதுதான் திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகள். இதைத்தான் தந்தை பெரியார் அவர்கள் மீண்டும் மீண்டும் கூறினார்.

### சமூகநீதி நடவடிக்கைகளில் அதிக அக்கறை கொண்டவர் வில்சன்!

மனிதர்களில் உயர்வு – தாழ்வு என்ற வேறுபாடு இல்லாத நிலையை உருவாக்கத்தான் 'இட ஒதுக்கீடு' எனப்படும் சமூகநீதி உருவாக்கப்பட்டது.

ஆண் – பெண் ஏற்றத்தாழ்வை அகற்றத்தான் பெண்ணுரிமைக் கருத்தியல் முன்னெடுக்கப்பட்டது.

இந்தக் கொள்கைகளை கருப்பொருளாகக் கொண்டு இந்த மாநாட்டை வில்சன் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்.

அரசியல் நடவடிக்கைகளைவிட, சமூகநீதி நடவடிக்கைகளில் அதிக அக்கறை கொண்டவர் நம்முடைய வில்சன் அவர்கள். அதனால்தான் இப்படியொரு மாநாட்டை, அகில இந்தியா முழுமைக்குமான மாநாடாக ஒருங்கிணைத்திருக்கிறார்.

தமிழ்நாட்டில் உதயமான திராவிட இயக்கத்தின் முற்போக்குக் கருத்துக்கள், மானுட வளர்ச்சிக்கான கருத்தியல்கள் அந்த அடிப்படையில் நடைபெறும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டுள்ள அகில இந்திய தலைவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றி!

### கடந்த மாநாட்டில் – நான் மேற்கொண்ட சூளுரை!

இந்தியா முழுவதும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை மீட்டெடுக்க, இப்படிப்பட்ட மாபெரும் அமைப்பை உருவாக்கி, நாமெல்லாம் ஒன்று சேர்ந்திருக்கிறோம்.

கடந்த ஆண்டு நடைபெற்ற முதல் மாநாட்டில் பங்கேற்றபோது, "இந்தியா முழுமையும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மக்களின் இடஒதுக்கீடு உரிமை காக்கப்படவேண்டும். தமிழ்நாட்டில் உள்ளதுபோல் சமூகநீதிக் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்படவேண்டும்" என்று வலியுறுத்திப் பேசியிருக்கிறேன். "சமூகநீதிக் கருத்தியல் வெற்றிபெற ஒத்த கருத்துள்ள சக்திகள் ஓரணியில் திரள்கிறது, இந்தியா முழுமைக்கும் அவசியம்" என்று கூறினேன்.

அடுத்த மாநாட்டில், ஒன்றிய பா.ஜ.க. அரசின் சமூகநீதிக்கு எதிரான செயல்பாடுகள் பற்றி சொல்லி, ஒன்றிய அரசின் நிறுவனங்களில் நிரப்பப்படாமல் இருக்கும் OBC, SC/ST பணியிடங்களை முழுமையாக நிரப்ப வலியுறுத்தினேன்.

நீதிபதிகள் நியமனம் மற்றும் அரசு ஊழியர்களின் பதவி உயர்விலும் இடஒதுக்கீடு, இடஒதுக்கீட்டிற்கு உள்ள 50 விழுக்காடு உச்சவரம்பு நீக்கப்படவேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் பலவற்றை நாம் நிறைவேற்றினோம்.

இடஒதுக்கீட்டு உரிமை மாநிலங்களின் அதிகாரத்திற்கு உட்பட்டதாக இருக்கவேண்டும் என்று அப்போது வலியுறுத்தினேன். இந்த நோக்கங்களை அடுத்த கட்டத்திற்குக் கொண்டுசெல்ல இன்றைக்கு மீண்டும் ஒன்று கூடியிருக்கிறோம்.

### சமூக நோய்களை முறிக்கும் மருந்தே, 'சமூகநீதி'!

சமூகநீதியை அடையவேண்டும் என்பது தனிப்பட்ட ஒரு மாநிலத்தின் எண்ணமோ, இந்தியாவின் பிரச்சினையோ அல்ல. எங்கெல்லாம் புறக்கணிப்பு – ஒதுக்குதல் – தீண்டாமை – அடிமைத்தனம் – அநீதி இருக்கிறதோ, அங்கெல்லாம் சமூக நோய்களை முறிக்கும் மருந்தாக இருப்பதுதான் சமூகநீதி!

சமூகரீதியாக, கல்விரீதியாக புறக்கணிக்கப்பட்டவர்களை கைதூக்கி விடுவதுதான், சமூகநீதி!

சமூகரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பின்தங்கியவர்கள் என்பதுதான் அரசியலமைப்புச் சட்டத்தின் சமூகநீதி வரையறை!

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 340-ஆவது பிரிவில் 'socially and educationally' என்பதுதான் வரையறையாக இருக்கிறது. அதே சொல்தான் அரசியலமைப்புச் சட்டத்தின் திருத்தத்திலும் சொல்லப்பட்டது. அதாவது சமூகநீதி எனப்படும் இடஒதுக்கீடு என்பதே சமூகரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பின்தங்கியவர்களுக்குத் தரப்படவேண்டும் என்பதுதான் இந்திய அரசியலமைப்புச் சட்ட வரையறை!

### அரசியல் அமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தம்!

இந்தத் திருத்தத்திற்கே காரணம், அன்றைய சென்னை மாகாணம்தான்! இந்தத் திருத்தத்திற்குக் காரணமான தலைவர்கள்தான் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணா அவர்களும்!

"சமுதாயத்திலும், கல்வியிலும் பிற்படுத்தப்பட்டவராக இருக்கும் எந்தச் சமூகத்தவர்க்கும் செய்யும் சலுகைகளையும் அரசியல் சட்டத்தின் எந்தப் பிரிவும் தடுக்காது" என்பதுதான் அரசியல் அமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட முதலாவது திருத்தம்!

இந்த திருத்தத்திற்குக் காரணம், "happenings in madras தான்" என்று நாடாளுமன்றத்திலேயே கூறினார் அன்றைய பிரதமர் நேரு அவர்கள்.

இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கும் வழிகாட்டியது திராவிட இயக்கம்!

சென்னை மாகாணத்தில் ஆட்சியை கைப்பற்றிய நீதிக்கட்சியின் ஆட்சியில், 1922-ஆம் ஆண்டு, அன்றைய முதலமைச்சர் பனகல் அரசர் அவர்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமை ஆணையைப் பிறப்பித்தார். அதுதான் இன்றைக்கு வரைக்கும் தமிழ்நாட்டில் தொடர்கிறது. தமிழ்நாட்டை பார்த்து பல்வேறு மாநிலங்கள் சமூகநீதியை வழங்கி வருகிறது. தமிழ்நாட்டு மக்களுக்கு சமூகநீதி வழங்கியதோடு, இந்தியாவின் மற்ற மாநில ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், அத்தகைய உரிமை கிடைக்க வழிகாட்டியதும் திராவிட இயக்கம்தான். இந்தக் கருத்தியல்தான் இன்றைக்கு அகில இந்தியா முழுமைக்கும் பரவி இருக்கிறது. ஆனால், சமூகநீதியை பா.ஜ.க. முறையாக அமல்படுத்துவது இல்லை. கடந்த பத்தாண்டு காலத்தில் ஒன்றிய அரசின் துறைகளில், பிற்படுத்தப்பட்டோருக்கான 27 விழுக்காடு ஒதுக்கீடு முழுமையாக வழங்கப்படவில்லை.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.12.2024) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக புதுதில்லியில் நடை பெற்ற அகில இந்திய சமூக நீதி கூட்டமைப்பின் மூன்றாவது தேசிய இணைய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். இம்மாநாட்டில், அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்கான கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் தலைவர் ஓய்வுபெற்ற நீதிபதி ஈஸ்வரப்பா. அகில இந்திய சமூக நீதி கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பி.வில்சன், ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன், பீகார் மாநில முன்னாள் துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி ராஜா, சமாஜ்வாதி கட்சித் தலைவரும் உத்திரபிரதேச மாநில முன்னாள் முதலமைச்சருமான அகிலேஷ் யாதவ், ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டு கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஃபரூக் அப்துல்லா, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் வைகோ, கனிமொழி கருணாநிதி, ஆ. ராசா, திருச்சி சிவா, தொல். திருமாவளவன், சட்டமன்ற உறுப்பினர்கள் பேராசிரியர் ஜவாஹிருல்லா, ஈஸ்வரன், பல்வேறு கட்சிகளைச் சார்ந்த முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஓய்வு பெற்ற நீதியரசர்கள், சமூக ஆர்வலர்கள் கல்வியாளர்கள் கலந்து கொண்டனர்.

### சமூகநீதிக்கு எதிரான ஒன்றிய அரசு!

ஏழை எளிய, பிற்படுத்தப் பட்ட, பட்டியலின, பழங்குடியின மக்கள் முன்னேறுவதை பா.ஜ.க. விரும்பவில்லை. அதனால்தான், அவர்கள் சமூகநீதிக்கு எதிராக இருக்கிறார்கள். இடஒதுக்கீட்டில், பொருளாதார அளவுகோலை நுழைக்கத் துடிக்கிறார்கள்.

ஏழை எளிய மக்களுக்கு பொருளாதார உதவி செய்வதை நாங்கள் தடுக்கவில்லை. ஆனால், சமூகரீதியாகப் பின்தங்கியவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இடஒதுக்கீட்டை, பொருளாதார அளவுகோலை மட்டுமே அடிப்படையாக வைத்துவிட்டு பொதுப்பிரிவினருக்கும் வழங்குவதைத்தான் எதிர்க்கிறோம்.

எப்படி பா.ஜ.க., பட்டியலின, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு விரோதமான கட்சியோ, அதேபோன்று பெண்களுக்கும் விரோதமான கட்சிதான். அதனால்தான், பெண்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்கும் மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை கிடப்பில் போட்டு வைத்திருக்கிறார்கள்.

### மகளிர் இடதுக்கீட்டுக்கு எதிராக பா.ஜ.க. இணைத்த ஷரத்துகள்!

மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தை, ஒரே ஒரு கட்சியை தவிர, மக்களவையிலும், மாநிலங்களவையிலும் இருந்த எல்லா கட்சிகளும் ஆதரித்து வாக்களித்தார்கள். எந்த முக்கியக் கட்சியும் எதிர்த்து வாக்களிக்கவில்லை. ஆனால், அது செயல்பாட்டிற்கு வந்துவிடக்கூடாது என்ற தடையை பா.ஜ.க.வே அந்த சட்டத்திற்குள் ஷரத்துக்களாக எழுப்பியது.

மக்கள்தொகை கணக்கெடுப்பு முடிந்த பிறகு அதை வைத்து தொகுதி மறுவரையறைகள் முடிந்த பிறகு - மகளிருக்கு 33 விழுக்காடு தருவோம் என்று சொன்னார்கள்.

மக்கள்தொகை கணக்கெடுப்பும், தொகுதி வரையறையும் முடிந்த பிறகு என்றால் 2029-ஆம் ஆண்டுக்குப் பிறகுதான், 33 விழுக்காடு இடஒதுக்கீடு பெண்களுக்கு கிடைக்கும். 2029-ஆம் ஆண்டு அதாவது இன்னும் 6 ஆண்டுகள் கழித்து நிறைவேறப்போகும் சட்டத்தை இப்போதே நிறைவேற்றிவிட்டதாக கணக்குக் காட்டியது பா.ஜ.க. அரசு.

### சட்டத்தைக் கொண்டுவந்த பா.ஜ.க., தடையையும் போட்டிருக்கிறது!

1996-ஆம் ஆண்டு, 2010-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டங்களில் இது மாதிரியான தடை சுவர்கள் இல்லை. அப்படி என்றால், இப்போது இந்தத் தடைகளை உருவாக்கியது யார்? இந்த சட்டத்தை கொண்டு வந்த பா.ஜ.க.வே தடையையும் போட்டிருக்கிறது.

1929-ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடந்த சுயமரியாதை மாநாட்டில்தான், பெண்களுக்குச் சொத்துரிமை, பணியுரிமை, மறுமணம் செய்து கொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு புரட்சிகரமான பெண்ணுரிமைத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பெண்களின் நலனுக்கு – கழக அரசில் அடுக்கடுக்கான திட்டங்கள்!

அதன் தொடர்ச்சியாகத்தான், தி.மு.க. அரசில் பெண்களின் நலன் சார்ந்த பல்வேறு அடுக்கடுக்கான திட்டங்கள் தீட்டப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எந்தக் கொள்கையைக் கூறினோமோ, அதை சட்டபூர்வமாகச் செயலாக்கி வரும் அரசுதான், திராவிட முன்னேற்றக் கழக அரசு!

மகளிர் இடஒதுக்கீட்டைத் தடுத்து, சதி செய்த மாதிரியே, சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்தவும் பா.ஜ.க. அரசு முன்வரவில்லை.

சாதிவாரிக் கணக்கெடுப்பை ஒன்றிய அரசு உடனே நடத்த வலியுறுத்தி தமிழ்நாடு சட்டசபையில் நாம் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறோம்.

சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு அவசியம்!

இந்திய மக்கள் அனைவருக்கும் கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு ஆகியவற்றில் சம உரிமை மற்றும் வாய்ப்பு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் திட்டங்களைத் தீட்டி, சட்டங்கள் இயற்ற சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அவசியம். 2021-ஆம் ஆண்டே எடுக்கப்பட்டிருக்க வேண்டிய மக்கள்தொகைக் கணக்கெடுப்பை ஒன்றிய பா.ஜ.க. அரசு உடனே தொடங்கவேண்டும். அதோடு இணைத்து சாதிவாரிக் கணக்கெடுப்பையும் நடத்தவேண்டும். இதைச் செயல்படுத்த பா.ஜ.க. அரசு மறுக்கிறது. சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தினால், அதை வைத்து உண்மையான சமூகநீதியை வழங்கவேண்டும் என்றுதான் தயங்குகிறார்கள்.

சாதிவாரிக் கணக்கெடுப்பை எடுக்க மறுப்பது மூலமாக சமூகநீதிக்கும், மகளிர் இடஒதுக்கீட்டு சட்டத்தை தள்ளிப் போட்டதால் பெண்ணுரிமைக்கும் எதிராக இருக்கிறது இந்த பா.ஜ.க. அரசு.

இதற்கு எதிராக நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்கவேண்டும்!

- பட்டியலின மக்களின் இடஒதுக்கீடு முறையாக வழங்கப்படவேண்டும்.
- பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு முறையாக வழங்கப்படவேண்டும்.
- சிறுபான்மையினர் இடஒதுக்கீடு முறையாக வழங்கப்படவேண்டும்.
- நீதித்துறையில் இடஒதுக்கீடு செயல்பாட்டிற்கு வரவேண்டும்.
- இதர பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடியின சமுதாயத்தினருக்கு, பதவி உயர்வில் இடஒதுக்கீடு உறுதி செய்யப்படவேண்டும்.
- சாதிவாரி கணக்கெடுப்பை ஒன்றிய அரசு நடத்தி, அதன் தரவுகளை வெளியிடவேண்டும்.

இதையெல்லாம் அகில இந்திய அளவிலும், மாநிலங்கள் அளவிலும் கண்காணிக்க வேண்டும். சமூகரீதியாகவும் கண்காணிக்கவேண்டும்.

- தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததும், ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஆணையத்தை அமைத்தது. சமூகநீதி ஆணையத்தை அமைத்தது. சமூகநீதி கண்காணிப்புக் குழுவை அமைத்தது. இந்தக் கண்காணிப்புக் குழு, கல்வி, வேலைவாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூகநீதி அளவுகோல், முறையாக, முழுமையாக பின்பற்றப்படுகிறதா என்பதைக் கண்காணித்து வருகிறது.

இதேபோன்று அனைத்து மாநிலங்களிலும் குழுக்கள் அமைக்கப்படவேண்டும்.

- சமூக நீதி - Social Justice
- மதச்சார்பற்ற அரசியல் - Secular Politics
- சமதர்மம் - Socialism
- சமத்துவம் - Equality

> **"இந்தக் கொள்கைகளை கருப்பொருளாகக் கொண்டு இந்த மாநாட்டை வில்சன் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார். அரசியல் நடவடிக்கைகளைவிட, சமூகநீதி நடவடிக்கைகளில் அதிக அக்கறை கொண்டவர் நம்முடைய வில்சன் அவர்கள். அதனால்தான் இப்படியொரு மாநாட்டை, அகில இந்தியா முழுமைக்குமான மாநாடாக ஒருங்கிணைத் திருக்கிறார்."**

- மாநில சுயாட்சி - State Autonomy
- கூட்டாட்சிக் கருத்தியல் - Federalism -

இவை உயிர்வாழும் இந்தியாவே, இணையற்ற இந்தியா!

எனவே, இத்தகைய கருத்தியல்களை நாம் ஒன்று சேர்ந்து முன்னெடுக்கவேண்டும்!

சமூகநீதி இந்தியாவை உருவாக்க - சமதர்ம இந்தியாவை உருவாக்க - சகோதரத்துவ இந்தியாவை உருவாக்க நாம் அனைவரும் இணைந்து போராட வேண்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இம்மாநாட்டில், அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்கான கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் தலைவர் ஓய்வு பெற்ற நீதிபதி ஈஸ்வரய்யா, அகில இந்திய சமூக நீதி கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பி.வில்சன், ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன், பீகார் மாநில முன்னாள் துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி. ராஜா, சமாஜ்வாதி கட்சித் தலைவரும் உத்திர பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சருமான அகிலேஷ் யாதவ், ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டு கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஃபரூக் அப்துல்லா, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, ஆ. ராசா, திருச்சி சிவா, வைகோ, தொல். திருமாவளவன், சட்டமன்ற உறுப்பினர்கள் பேராசிரியர் ஜவாஹிருல்லா, ஈஸ்வரன், பல்வேறு கட்சிகளைச் சார்ந்த முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஓய்வு பெற்ற நீதியரசர்கள், சமூக ஆர்வலர்கள் கல்வியாளர்கள் கலந்து கொண்டனர்.

---

**இந்தியா முழுவதுமுள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை மீட்டெடுக்கவே இந்த மாநாடு**

**கடந்த 10 ஆண்டுகளில் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு சரியாக வழங்கப்படவில்லை**

**ஏழை எளிய, பிற்படுத்தப்பட்ட மக்கள் மற்றும் மகளிர் முன்னேற்றத்தை பாஜக அரசு விரும்பவில்லை**

**சமூக நீதிக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில், முன்னேறிய வகுப்பினருக்கு 10% இடஒதுக்கீட்டை ஏற்க முடியாது**

**கல்வி, வேலைவாய்ப்பில் சம உரிமை, சமவாய்ப்பு கிடைக்க சாதிவாரி கணக்கெடுப்பு அவசியம்**

**சாதிவாரியான மக்கள் தொகை கணக்கெடுப்பை ஒன்றிய அரசு உடனே தொடங்க வேண்டும்**

**ஓ.பி.சி. மற்றும் பட்டியலின சமூகத்தினருக்கு பதவி உயர்வில் இடஒதுக்கீடு வழங்க வேண்டும்**

**சமூக நீதி, சமத்துவம், மாநில சுயாட்சி, கூட்டாட்சி தத்துவம் இவை நாட்டிற்கு முக்கியம்**

**கல்வி, வேலைவாய்ப்பில் சம உரிமை, சமவாய்ப்பு கிடைக்க சாதிவாரி கணக்கெடுப்பு அவசியம்**